# நாமக்கல் அசெம்பிளி ஆஃப் காட் சர்ச்

696-A, அன்பு நகர் அருகில், சேலம் ரோடு,

நாமக்கல் - 637 001

# அனுதின ஜெபம்



# நமது சபையின் இலக்கு

குடும்பங்கள்
ஞானஸ்நானம்
பராமரிப்புக் குழுக்கள்
வீட்டு சபைகள்
மிஷனெரிகள்
பயிற்சிகள்

சீஷர்கள்
ஜெப பங்காளர்கள்
ஊழிய பங்காளர்கள்
பொருளாதார பங்காளர்கள்
மூப்பர்கள், தலைவர்கள்
முழு நேர போதகர்கள்

# தரிசனம் 6000

ஆராதனை - உயரம்
சீஷத்துவம் - ஆழம்
நற்செய்தி பணி - நீளம்
சமூக சேவை - அகலம்

அன்பின் ஐக்கியம் - உறுதி
சாட்சி வாழ்வு - வாசனை
அடைக்கலம் - நிழல்
ஆசீர்வாதம் - கனி

- ஏசாயா 60 : 22

# 1. துதி ஆராதனை

**பிதாவாகிய தேவனே உம்மை ஆராதிக்கின்றோம் !**

★ வானம் பூமி யாவும் படைத்தவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை படைத்தவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மலைகள், ஆறுகள், கடல்கள், நீரூற்றுகளை உண்டாக்கினவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ காண்கின்ற, கண்களால் காண முடியாத அனைத்து ஜீவராசிகளையும் படைத்தவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மனிதர்களாகிய எங்களை உருவாக்கி, படைத்து பெருகச் செய்தவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ ★ ★ ★ ★

★ சர்வ வல்லமையுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எங்கும் நிறைந்திருக்கும் தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எல்லாம் அறிந்த தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மகா ஞானமுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மகா பரிசுத்தமுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மகா நீதியுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மகத்துவமும் பயங்கரமுமான தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ உடன்படிக்கையை காக்கும் உண்மையுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ அன்பும், இரக்கமும், கிருபையுமுள்ள தேவனே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ ★ ★ ★ ★

★ தேவைகளை சந்தித்து பராமரிப்பவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ வெற்றி தந்து பாதுகாப்பவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ வியாதியிலிருந்து சுகம் தருபவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எல்லா சூழ்நிலைகளிலும் சமாதானம் தருபவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ ஆலோசனை தந்து வழிநடத்துபவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பாவங்களை மன்னித்து நீதிமானாக்குபவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ இன்றும் என்றும் எங்களோடிருப்பவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உம்மை ஆராதிக்கின்றோம்!**

★ வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய இயேசுவே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பாவிகளை மன்னிக்கும் உலக இரட்சகராம் இயேசுவே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பூமியை ஆளுகை செய்யும் நீதியுள்ள ராஜாதி ராஜாவே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பரலோகத்தில் சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எங்களை பரலோகத்தில் சேர்க்க மீண்டும் வருபவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பசி போக்கும் ஜீவ அப்பமானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ தாகம் தீர்க்கும் ஜீவதண்ணீரானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பாதை காட்டும் ஜீவ வழியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ இருள் நீக்கும் ஜீவ ஒளியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ பாவம் போக்கும் ஜீவ பலியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ அறியாமை நீக்கும் ஜீவ சத்தியமானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ மரணத்திலிருந்து தப்புவிக்கும் நித்திய ஜீவனானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ வாழ வைக்கும் ஜீவ வார்த்தையானவரே உம்மை ஆராதிக்கின்றோம்!

**பரிசுத்த ஆவியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்!**

★ எங்களை பெலப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ கற்றுக்கொடுக்கும் பரிசுத்த ஆவியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ வழிநடத்தும் பரிசுத்த ஆவியானவரே உம்மை ஆராதிக்கின்றோம்.

★ அன்பின் கனிகளை தரும் பரிசுத்த ஆவியானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ வல்லமை வரங்களை தரும் பரிசுத்த ஆவியானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எங்களை பயன்படுத்தும் பரிசுத்த ஆவியானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

★ எங்களுக்குள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரே
உம்மை ஆராதிக்கின்றோம்.

(தொடர்ந்து கர்த்தரை புகழ்ந்து துதியுங்கள்)
அல்லேலூயா, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது.

# 2. நன்றி சொல்லுதல்

★ கடந்த நாட்களெல்லாம் எங்கள் தேவைகளை சந்தித்து, எங்களை பராமரித்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ எல்லா ஆபத்துக்கள், விபத்துக்கள், நாசமோசங்கள், போராட்டங்களிலிருந்து எங்களை பாதுகாத்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ எங்கள் வியாதி, பெலவீனத்திலிருந்து எங்களுக்கு சுகம் தந்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ எல்லா சூழ்நிலைகளிலும் எங்களுக்கு சமாதானம் தந்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ நல்ல ஆலோசனை தந்து எங்களுக்கு வழிகாட்டி, வழி நடத்தினீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ எங்கள் பாவங்களை மன்னித்து இரட்சித்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

★ நாங்கள் பரிசுத்தமாய் வாழ உதவி செய்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ கடந்த நாட்களெல்லாம் எங்களோடிருந்த உம்முடைய தேவ பிரசன்னத்திற்காக நன்றி செலுத்துகிறோம்!

★ எங்களை உமக்காக பயன்படுத்தினீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ எங்கள் ஜெபங்களை கேட்டீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ நேற்றைய நிகழ்ச்சிகள், வேலைகளை ஆசீர்வதித்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

★ நேற்றைய ஊழியங்கள், பிரயாணங்களை ஆசீர்வதித்தீரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்!

நம்மை சத்துருக்களுடைய பற்களுக்கு இரையாக
ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். – சங். 124:6

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு
ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். – 1 கொரி. 15:57

தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக
அவருக்கு ஸ்தோத்திரம் – 2 கொரி. 9:15

(மேலும் நேற்று தேவன் உங்களுக்கு செய்த அநேக நன்மைகளை
நினைத்து நன்றி சொல்லுங்கள்)

# 3. பாவ அறிக்கை

"தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்
என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.
வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து,
நித்திய வழியிலே என்னை நடத்தும்" – சங். 139 : 23, 24.

1. தேவனே, என் பாவங்களை, மீறுதல்களை, கீழ்ப்படியாமைகளை மன்னியும்.
2. தேவனே, என் குற்றங்களை, என் குறைகளை மன்னியும்.
3. தேவனே, உமக்குப் பிரியமில்லாத சிந்தனை, பார்வை, வார்த்தைகள் இவைகளை மன்னியும்.
4. உமக்கு சித்தமில்லாத செயல்கள், நடக்கைகள், பழக்கங்கள் இவைகளை மன்னியும்.
5. என் புத்தியீனத்தையும், கவனக்குறைவையும், தவறுகளையும் மன்னியும்.
6. நாங்கள் ஒருவருக்கொருவர் விரோதமாக செய்த தப்பிதங்களை மன்னியும்.
7. தேவனே செய்யவேண்டியதை செய்யாமல் போன தவறுக்காக மன்னியும்
8. செய்யக்கூடாததை செய்த தவறுகளுக்காக மன்னியும்.

★ எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களையும், குற்றங்களையும், பாவங்களையும் மன்னியும். –மத். 6:12

★ "உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும்". –சங். 51 : 1

★ "என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னை சுத்திகரியும்" – சங். 51 : 2

★ இயேசுவின் இரத்தத்தினால் என்னை கழுவும்.

★ இயேசுவின் நாமத்தினால் என்னை மன்னியும்.

★ தேவனே உமது வசனத்தினால் என்னை புதுப்பியும்.

★ பரிசுத்த ஆவியானவரே என்னை பரிசுத்தமாக்கும்.

★ தேவனே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்.

★ என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை பரிசுத்தமாக்கும்.

★ "என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக".– சங். 19:14

★ "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்". – சங். 51 : 10

# 4. சத்துருவை துரத்துதல்

"அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்" – சங். 101:8

**என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவீர்கள் :**

1. அக்கிரமத்தின் கிரியைகளை, அசுத்த ஆவிகளை, அந்தகார வல்லமைகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
2. பொல்லாத ஆவிகளை, பெலவீனப்படுத்தும் ஆவிகளை, பாலியல் பாவ சோதனைகளை கொடுக்கும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
3. வியாதிகளை உண்டாக்கும் ஆவிகளை, விபத்துக்களை உண்டாக்கும் ஆவிகளை, வீழ்ச்சிகளை ஏற்படுத்தும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
4. ஐக்கியத்தை கெடுக்கும் ஆவிகளை, பிரிவினையை உண்டாக்கும் ஆவிகளை, குழப்பத்தை கொண்டு வரும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
5. மந்திரவாத ஆவிகளை, குறி சொல்லும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
6. இச்சையின் ஆவிகளை, பழிவாங்கும் ஆவிகளை, இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
7. விபச்சார ஆவிகளை, வன்முறை ஆவிகளை, விக்கின ஆவிகளை, இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
8. மாமிசத்தின் கிரியைகளை தூண்டும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
9. குற்றப்படுத்தும் ஆவிகளை, பொறாமை எரிச்சல் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
10. திருச்சபைக்கு விரோதமாக, ஊழியர்களுக்கு விரோதமாக, விசுவாசிகளுக்கு விரோதமாக செயல்படுகிற ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
11. தீவிரவாத ஆவிகளை, சமூக விரோத ஆவிகளை, கலவரங்களை தூண்டும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறோம்.
12. இரட்சிக்கப்படாதபடிக்கு கண்களை குருடாக்கும் ஆவிகளை, சபைக்கு வரவிடாதபடி தடுக்கும் ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து கொள்கிறோம்.
13. என் ஆவி, ஆத்மா, சரீரத்திற்கு விரோதமாய் போராடும் பொல்லாத ஆவிகளை இயேசுவின் நாமத்தினாலே கடிந்து துரத்துகிறேன்.

| | | |
|---|---|---|
| வெளிச்சம் உண்டாவதாக | – | இருள் விலகுவதாக |
| சமாதானம் உண்டாவதாக | – | குழப்பம் நீங்குவதாக |
| இரட்சிப்பு உண்டாவதாக | – | அறியாமை விலகுவதாக |
| சுகம் உண்டாவதாக | – | வியாதி நீங்குவதாக |
| அன்பு உண்டாவதாக | – | இனவெறி விலகுவதாக |
| பாசம் உண்டாவதாக | – | பகை விலகுவதாக |
| பெலன் உண்டாவதாக | – | பெலவீனம் விலகுவதாக |
| பரிசுத்தம் உண்டாவதாக | – | அசுத்தங்கள் அகன்றுபோவதாக |
| ஆசீர்வாதம் உண்டாவதாக | – | சாபம் நீங்குவதாக |
| செழிப்பு உண்டாவதாக | – | வறுமை நீங்குவதாக |
| நன்மை உண்டாவதாக | – | தீமை அகன்றுபோவதாக |
| பரிசுத்தவான்கள் பெருகுவார்களாக | – | பாவிகள் குறைவார்களாக |
| நீதிமான்கள் பெருகுவார்களாக | – | துன்மார்க்கர்கள் குறைவார்களாக |
| தேவ ஊழியர்கள் பெருகுவார்களாக | – | சமூக விரோதிகள் குறைவார்களாக |
| திருச்சபைகள் வளர்வதாக | – | மூட நம்பிக்கைகள் அகன்றுபோவதாக |
| தேவநாமம் மகிமைப்படுவதாக | – | பிசாசின் கிரியை அகன்றுபோவதாக |
| இயேசுவின் இராஜ்ஜியம் வருவதாக | – | பிசாசின் இராஜ்யம் அழிவதாக |
| தேவசித்தம் நிறைவேறுவதாக | – | சாத்தானின் சதி திட்டங்கள் செயலற்று போவதாக |

**சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை**
**உங்கள் கால்களின் கீழே நசுக்கிபோடுவார்.**

**- ரோமர் 16:20**

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அருளும்**
**அன்பு, சந்தோஷம், சமாதானம், நீதி, செழிப்பு, சுகம், வெற்றி**
**எப்போதும் உண்டாவதாக.**
**கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள்**
**சிதறடிக்கப்படுவார்களாக, உம்மை பகைக்கிறவர்கள்**
**உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக.**
**ஆமென். - எண். 10:35**

(தொடர்ந்து பரிசுத்த ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் புகழ்ந்து ஜெபியுங்கள்)

தேசத்தின் மேலும், தேவாலயத்தின் மேலும், தேவஜனத்தின் மேலும், பாதுகாப்பும்,
தேவ ஆளுகையும் உண்டாவதாக. ஆமென்.

# 5. மன்றாட்டு ஜெபம்




"PRAYING HAND"

**தேவனே! உம் நாமம் மகிமைப்படுவதாக, உம் ஆளுகை வருவதாக, உம் சித்தம் நிறைவேறுவதாக...**

1. இரட்சிக்கப்படாதவர்களுக்காக ஜெபிக்கிறோம். அவர்களை கட்டியிருக்கிற பாவத்தின் கட்டு, நோயின் கட்டு, பேயின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட்டு சபைக்கு வர ஜெபிக்கிறோம். ஜீவ புத்தகத்தில் அவர்கள் பெயர் எழுதப்படவும் ஜெபிக்கிறோம்.

   பாவத்தை குறித்தும், நீதியை குறித்தும், நியாயத்தீர்ப்பை குறித்தும் பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்தும்படியாக ஜெபிக்கிறோம். ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் எடுக்கவும், உண்மையாய் கிறிஸ்துவை பின்பற்றும் சீஷர்களாக திகழவும் ஜெபிக்கிறோம்.

   பின்மாற்றம் அடைந்தவர்கள் மனந்திரும்பி சபைக்கு வரும்படியாக ஜெபிக்கிறோம்

.2. **தலைவர்களுக்காக :**

திருச்சபையின் போதகர்களுக்காகவும், சபை பணியாளர்களுக் காகவும், பராமரிப்பு குழு தலைவர்களுக்காகவும், மூப்பர்களுக்காகவும்,

பல்வேறு ஐக்கியங்கள் மற்றும் ஊழியக் குழுக்களின் தலைவர்களுக் காகவும் ஜெபிக்கிறோம்.

ஜெப பங்காளர்களுக்காகவும், தசமபாகம், காணிக்கை மற்றும் ஆலய கட்டிட பணிக்காக கொடுக்கிற பொருளாதார பங்காளர்களுக்காகவும், ஊழிய பங்காளர்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

3. **விசுவாசிகளின் பொதுவான தேவைகள் சந்திக்கப்பட :**

1) திருமண காரியங்கள் நடைபெற.
2) குழந்தை பாக்கியம் கிடைக்க, சுகப்பிரசவம் நடக்க.
3) பிள்ளைகளின் கல்விக்காக.
4) வேலை கிடைக்க,
5) அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட. அத்தியாவசிய பொருட்கள் வாங்கப்பட.
6) தொழில், விவசாயம், வியாபாரம், வேலையில் முன்னேற்றம் காண, வளர்ச்சியடைய, நல்ல மழை பெய்ய
7) வரவேண்டிய பணம் வரவும். கொடுக்க வேண்டிய பணம் கொடுக்கப்படவும், பணத்தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிக்கிறோம்.
8) கோர்ட், கேஸ்கள் வெற்றியடையவும், தாமதமின்றி கிடைக்கவும்.
9) தீராத வியாதிகள் சுகமாக,
10) அசுத்த ஆவிகள் விலக.
11) கெட்ட தொடர்புகள் மற்றும் கெட்ட பழக்கத்திலிருப்பவர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற.
12) குடும்பம் சமாதானமாக இருக்க, எதிர்காலம் ஆசீர்வாதமாய் இருக்கவும், பின்மாற்றம் அடைந்தவர்கள் மனந்திரும்பி மீண்டும் சபைக்கு வர.
13) ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைந்து, பயிற்சி பெற்று, முதிர்ச்சியடைய ஜெபிக்கிறோம். பரிசுத்தத்தில் வளர்ச்சியடைந்து வரங்கள், தாலந்துகளை பெற்று தேவசித்தம் செய்து தேவராஜ்ய வளர்ச்சிக்கு பயன்படும்படியாக ஜெபிக்கிறோம்.

4. **சபை தரிசனம் :**

தரிசனம் 6000 (சீஷர்கள்) நிறைவேறும்படியாக, 600 பராமரிப்புக் குழுக்கள் சபையில் உருவாகும்படியாக, தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட, கிராமங்களில் வீட்டு சபைகள் நிறுவப்பட, ஒவ்வொரு விசுவாசியும், பராமரிப்பு குழுத்தலைவராகவும், ஒவ்வொரு விசுவாசியின் வீடும் பராமரிப்புக் குழு, மற்றும் ஞாயிறு பள்ளி நடைபெறும்

இடமாக திகழவும், நாமக்கல் நகரில் அனைத்து வீதிகளிலும் பராமரிப்பு குழுக்கள் உருவாகவும் ஜெபிக்கிறோம். நிலம் வாங்கப்பட, கட்டிடம் கட்டப்பட, பணத்தேவைகள் சந்திக்கப்பட, திரளான மக்கள் கூட்டங்கள் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் சேர்க்கப்பட ஜெபிக்கிறோம். நாமக்கல் மறுரூபமடைய ஜெபிக்கிறோம்..

5. **சபை ஊழியம் :**

நடைபெற்றுக் கொண்டிருக்கிற வீட்டுசபைகள், பராமரிப்புக் குழுக்கள் வளர்ச்சியடைய ஜெபிக்கிறோம். சுவிசேஷ ஊழியம், பின் தொடர் பணி ஊழியம், சீஷத்துவ பயிற்சி ஊழியம், ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், சிறுவர்கள் ஐக்கியங்கள், ஜெப ஊழியங்கள், ஞாயிறு ஆராதனைகள் மற்றும் சபையின் பிற ஊழியங்களுக்காக ஜெபிக்கிறோம்.

6. **தேசத்திற்காக :**

தேசிய எழுப்புதல் உண்டாக ஜெபிக்கிறோம். இந்தியா இரட்சகரை அறிய வேண்டுமே. இருளில் உள்ளோர் வெளிச்சத்தையே காண வேண்டுமே. தேசத்தில் நடைபெறும் அனைத்து விதமான ஊழியங்களுக்காக,

மிஷினெரிகளின் பாதுகாப்பு மற்றும் ஆவிக்குரிய, சரீர, பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கிறோம். அறுவடை மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமானனே உமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி தயவாய் வேண்டிக் கொள்கிறோம். (லூக்கா 10:2)

விக்கினங்கள், வியாதி, விபத்து, விபச்சாரம், வன்முறை, வறுமை, வறட்சி இல்லாத இந்தியாவாக மாற ஜெபிக்கிறோம்.

திருச்சபைகள் நிறைந்த இந்தியாவாகவும், ஆரோக்கியம், பரிசுத்தம், அன்பு, சந்தோஷம், சமாதானம், செல்வம், செழிப்பு நிறைந்த இந்தியாவாகவும் உருவாக ஜெபிக்கிறோம். இயேசு ராஜாவே எங்கள் தேசத்தை இரட்சியும், ஆசீர்வதியும்.

7. **உலக நாடுகளுக்காக :**

இஸ்ரவேல் தேசத்தின் சமாதானத்திற்காக வேண்டிக்கொள்கிறோம். இயற்கை சீற்றங்கள், மதவாதங்கள், தீவிரவாதங்கள், கலவரங்கள் இவைகளுக்கு விலக்கி அனைத்து உலக நாடுகளும் பாதுகாக்கப்பட ஜெபிக்கிறோம். சமாதானமும், நீதியும் உண்டாக ஜெபிக்கிறோம்.

**8. ஸ்தாபன ஊழியங்களுக்காக, தரிசனம் நிறைவேற :**

ஏ.ஜி. ஸ்தாபனத்தின் தலைவர்களுக்காக, பிராந்திய மேற்பார்வையாளர்களுக்காக, மண்டல போதகர்களுக்காக, வேதாகம கல்லூரிகளுக்காக, மிஷன் ஊழியங்களுக்காக, சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், மாணவர் ஊழியம், ஆண்கள் ஐக்கியம், பெண்கள் ஐக்கியம் மற்றும் சுவிசேஷ ஊழியங்களுக்காக, ஸ்தல சபை போதகர்களுக்காக, அனைத்து விசுவாச மக்களுக்காக ஜெபிக்கிறோம்.

25000 திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட ஜெபிக்கிறோம்.

**9. முக்கிய குறிப்புகளுக்காக :**

நடைபெற இருக்கும் சபையின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்காக, முக்கிய ஜெபக்குறிப்புகளுக்காக, நாம் கேள்விப்பட்ட, மனதை பாரப்படுத்துகிற முக்கிய ஜெபக்குறிப்புகளுக்காக மற்றும் அவசர தேவைகளுக்காக ஜெபிப்போமாக.

**10. உங்கள் தேவைகள், பிரச்சனைகளுக்காக :**

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். பிலி.4:6,7 என்ற வசனத்தின்படி .... எங்களை நேசிக்கிற நல்ல பிதாவே. ஆமென்.

## 6. வேத தியானம்

வேத பகுதியில் அல்லது அந்த அதிகாரத்தில் உள்ள வசனங்களை ஒருவர் ஒரு வசனத்தை வாசிக்க மற்றவர்கள் அடுத்த வசனத்தை வாசிக்கலாம். அல்லது குறைவான நபர்கள் இருந்தால் வசனத்தின் எண்ணிக்கைக்குதக்க இரண்டோ, மூன்றோ வசனங்களை வாசிக்கலாம்.

1. இந்த வேதப்பகுதி என்ன சொல்கிறது ?
2. அதன் அர்த்தம் என்ன ? நீங்கள் புரிந்து கொள்வது என்ன ?
3. நமது நடைமுறை வாழ்க்கையில் அதை எப்படி பயன்படுத்துவது ?

(முக்கியமான வசனத்தை திரும்ப திரும்ப வாசித்து, தியானித்து, அந்த வசனத்தின் அடிப்படையில் ஜெபித்து நிறைவு செய்ய வேண்டும். )

# 7. அறிக்கையிடுங்கள்

1. இயேசு கிறிஸ்து என்னை நேசிக்கிறார். என் பாவங்களை மன்னித்து, என்னை பரிசுத்தமாக்கியிருக்கிறார். தேவன் என்னை நேசித்து அவருடைய பிள்ளையாக என்னை அங்கீகரித்திருக்கிறார்.

2. நான் இந்த பூமிக்கு உப்பாக, வெளிச்சமாக, அடைக்கலப்பட்டணமாக இருக்கிறேன். நான் கனிகொடுக்கும்படிக்கு அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவன். அவர் என் மூலம் மகிமைப்படுகிறார். நான் சகல ஜனங்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கிறேன்.

3. இயேசு இன்றும் என்றும் என்னோடே இருக்கிறார். கர்த்தர் என் இராஜாவாக இருக்கிறார். நான் குறைந்துபோவதில்லை. அவர் என்னை விட்டு விலகுவதுமில்லை என்னை கைவிடுவதுமில்லை. நான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் எனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை.–யோசுவா 1:5. நான் பலங்கொண்டு, திடமனதாயிருப்பேன்.

4. இந்த தேவன் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் நம்மடைய தேவன். மரணபரியந்தம் என்னை நடத்துவார். நீடித்த நாட்களால் திருப்தியாக்கி இரட்சிப்பை எனக்கு காண்பிப்பார். நன்மையும் கிருபையும் என்னை தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். நன் பயப்படமாட்டேன். கவலைப்பட மாட்டேன்.

5. அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28

(உங்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்யவும்)

# 8. அர்ப்பணிப்பு

1. தேவனே என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.
2. என்னையும், என் குடும்பத்தையும் உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.
3. எங்கள் சபை மக்கள், போதகர் யாவரையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.
4. எங்கள் பகுதி வாழ் மக்களையும், ஊரையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.
5. வானமும், பூமியும் உம்முடையது. பூமியும் அதின் குடிமக்களும் உம்முடையவர்கள்.
6. நாங்கள் உம்முடையவர்கள். எங்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.
7. தமிழ்நாட்டையும், இந்திய தேசத்தையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.
8. அனைத்து உலக மக்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

9. அகில உலக திருச்சபை மக்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

10. சகல பரிசுத்தவான்களையும், திருச்சபை தலைவர்களையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

11. இந்த நாளையும், இன்றைய வேலைகள், நிகழ்ச்சிகளையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

12. இந்த நாளின் ஊழியங்களையும், பிரயாணங்களையும் உமக்கு உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

13. எங்கள் தரிசனம் நிறைவேற இன்று எங்களை பயன்படுத்தும். உமது நாமம் மகிமைப்பட அர்ப்பணிக்கின்றோம், உமது ராஜ்யம் வர அர்ப்பணிக்கின்றோம், உம்முடைய சித்தம் நிறைவேற எங்களை அர்ப்பணிக்கின்றோம்.

14. பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படவும், பரிசுத்த ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளவும் எங்களை அர்ப்பணிக்கின்றோம்.

15. இயேசுவின் அன்பு, சந்தோஷம், சமாதானம் இவைகளினால் நிரப்பும். வேத வசனத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிரப்பும்.

16. இன்றைக்குத் தேவையான ஞானத்தையும், ஞாபக சக்தியையும் தாரும். கிருபையையும், இரக்கத்தையும் தாரும். ஆவியின் கனிகளையும், வரங்களையும் தாரும். வல்லமையையும் வழிகாட்டுதலையும் தாரும், தைரியத்தையும் பெலனையும் தாரும்.

17. நான் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க என்னை ஆசீர்வதியும். ஆமென்.

## 9. கர்த்தருடைய ஜெபம்

★ பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,

★ உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;

★ உம்முடைய ராஜ்யம் வருவதாக;

★ உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல இந்த பூமியிலேயும் செய்யப்படுவதாக.

★ எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

★ எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களையும், குற்றங்களையும் மன்னியும்.

★ எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்,

★ ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென். – மத்தேயு 6 : 9–13

# ஜாமக்காரர் ஜெபம்

## I) பாதுகாப்புக்காக :

### a. விசுவாசிகள், ஊழியர்கள் பாதுகாக்கப்பட:

1. போக்கையும் வரத்தையும் பாதுகாத்தருளும்.
2. வியாதி, துன்பங்களுக்கு விலக்கிப் பாதுகாத்தருளும்.
3. பாவம், வீழ்ச்சி இவர்கள் வாழ்க்கையில் வராதபடி பாதுகாத்தருளும்.
4. பிசாசின் கிரியைகளுக்கும், விபத்துக்களுக்கும் நாசம் மோசங்களுக்கும் இவர்களை விலக்கி பாதுகாத்தருளும்.

### b. சபை மற்றும் விசுவாசிகளின் உடைமைகள் பாதுகாக்கப்பட:

1. சபையின் பொருட்கள், கட்டிடங்கள், வாகனங்கள், கயவர்களின் கண்களிலிருந்து பாதுகாக்கப்பட.
2. சபையாரின் வீடுகள் உடைமைகள், பொருட்கள், வாகனங்கள், திருடர்கள், விஷமிகளின் பிடியிலிருந்து பாதுகாக்கப்பட.
3. விசுவாசிகள் வஞ்சகர்களால் வஞ்சிக்கப்படாமல் பாதுகாக்கப்பட.

### c. தேசத்தின் பாதுகாப்புக்காக :

1. தீவிரவாதிகளின் பிடியிலிருந்து பாதுகாக்கப்பட.
2. கொள்ளை நோய்களுக்கு விலக்கி பாதுகாக்கப்பட.
3. இயற்கை சீற்றங்களுக்கு விலக்கி பாதுகாக்கப்பட.
4. பலவிதமான போதனைகளுக்கு விலக்கி பாதுகாக்கப்பட.
5. பிசாசின் பிடியிலிருந்து விலக்கி பாதுகாக்கப்பட.

## II) இரட்சிப்புக்காக :

1. சகல மக்களும் இயேசுவை தங்கள் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
2. விசுவாசிகளின் இரட்சிக்கப்படாத குடும்ப அங்கத்தினர்கள் இரட்சிக்கப்பட.
3. பின்வாங்கிப் போனவர்கள் மறுபடியும் மனம் திரும்பி இரட்சிக்கப்பட.
4. நாமக்கல் மறுரூபமடைய. சபை எண்ணிக்கை 6000-மாக பெருக.

## III) முக்கியமான தேவைகள் மற்றும் பிரச்சனைகளுக்காக :

1. நாம் கேள்விப்பட்ட, வாசித்த சில ஜெபக்குறிப்புகள்.
2. நமது மனதை பாரப்படுத்துகிற குறிப்புகளுக்காக
3. அவசர தேவைகளுக்காக

(தற்போதைய சூழ்நிலைகளுக்காக ஜெபியுங்கள்)

“கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்..., மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள்”. - மீகா 4 : 1

# பட்டண மறுரூப ஜெபம்

## பட்டணத்திற்கு அஸ்திபாரமான ஏழு அமைப்புகள்

### 1. அரசாங்கம் :

அரசு அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், நிர்வாகம், சட்டம், நீதி, சுகாதாரம் இத்துறையில் உள்ளவர்கள் இரட்சிக்கப்பட.

### 2. வியாபாரம், தொழில் :

வியாபாரிகள், பல்வேறு நிதி நிறுவனங்கள், கனினி நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், உற்பத்தி தொழில்கள், பெரும் தொழில் அதிபர்கள், சிறு தொழில்கள், முதலாளிகள், அதில் பணிபுரியும் வேலையாட்கள் இரட்சிக்கப்பட,

### 3. கல்வி :

தாளாளர், முதல்வர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் இரட்சிக்கப்பட.

கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் இரட்சிக்கப்பட.

### 4. தகவல்தொடர்பு (மீடியா) :

செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி, இன்டர்நெட், வெப்சைட்கள், சமூக வலைதளங்கள் - இவற்றில் பணியாற்று பவர்கள் இரட்சிக்கப்பட.

### 5. விளையாட்டு, கலை பண்பாட்டு துறை :

விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் - இரட்சிக்கப்பட.
கிராமிய கலை, இசை கலைஞர்கள், வெள்ளித்திரை, சின்னத்திரை நடிகர்கள் இரட்சிக்கப்பட.

### 6. மதம், தத்துவம், திருச்சபை :

மார்க்கபேதங்கள், போலிச்சாமியார்கள், மூடநம்பிக்கை உள்ளவர்கள், மனித வணக்கம் செய்பவர்கள் இரட்சிக்கப்பட, அறியாமையும், அடிமைத்தனமும் மாற.

## 7. குடும்பம் :

கணவன், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் இரட்சிக்கப்பட.

குடும்பத்தில் வேதாகம மதிப்பீடுகள் கட்டப்பட, அன்பு, சந்தோஷம், சமாதானம் உண்டாக, குடும்ப ஜெபம் நடைபெற

***மேற்கண்ட இந்த ஏழு அமைப்புகளில் :***

நீதி, எளிமை, இரக்கம், நேர்மை, கீழ்ப்படிதல், பணிவு, உண்மை, பரிசுத்தம், தெய்வபயம், இயேசுவின் மேலும், அவருடைய வார்த்தையிலும் விசுவாசம், அன்பு, தியாகம் போன்ற குணாதிசயங்கள் உண்டாக ஜெபிக்கிறேன்.

இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக, எஜமானனாக, போதகராக, வழியும், சத்தியமும், ஜீவனுமாக, இரட்சகராக, நித்திய தேவனாக, தகப்பனாக அறிந்து ஆராதிக்கும்படியாக ஜெபிக்கிறேன்.

***தேசத்தின் இந்த ஏழு முக்கியமான அமைப்புகளில் மறுரூபத்தைக்காண ...***

- **நான் எப்படிப்பட்ட நபராக மாற வேண்டும் என உணர்த்தியருளும்.**
- **நான் என்ன செய்ய வேண்டும் என்று காண்பித்தருளும்.**
- **நான் என்ன சொல்ல வேண்டும் என்று கற்றுத்தாரும்.**

**இந்த ஏழு அமைப்புகளிலும்**
**இயேசுவின் நாமம் மகிமைப்படும்படியாக,**
**தேவனுடைய ராஜ்ய வாழ்க்கைமுறை வரும்படியாக,**
**இதில் செயல் ஆற்றுபவர்கள் தேவனுடைய சித்தத்தை**
**நிறைவேற்றுபவர்களாக இருக்க ஜெபிக்கிறேன்.**

---

**மேற்கண்ட இந்த 7 அமைப்புகளில்**
**நான் இயேசு கிறிஸ்துவுக்கு உப்பாக, வெளிச்சமாக,**
**சாட்சியாக வாழ ஜெபிக்கிறேன்.**

# பாக்கியவான்கள் யார்?

மத்தேயு: 5:1–16

1. தாழ்மையும் எளிமையுமானவர்கள்.
2. தன் நிலை உணர்ந்து வருந்துபவர்கள். நொருங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயம் உள்ளவர்கள்.
3. சாந்தமும் பொறுமையுள்ளவர்கள்.
4. நீதியின்மேல் பசி தாகமும், வாஞ்சையுமுள்ளவர்கள்.
5. இரக்கமுள்ளவர்கள்.
6. பரிசுத்தமுள்ளவர்கள்.
7. சமாதானம் பண்ணுகிறவர்கள்.
8. நீதியினிமித்தம் துன்பப்படுபவர்கள், பாடுபடுபவர்கள்
9. உப்பைப்போல, வெளிச்சத்தை போல, அடைக்கலப்பட்டணம் போல தங்கள் வாழ்வில் தேவனை மகிமைப்படுத்துபவர்கள்.

---

இஸ்ரவேலே, கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.
– உபாகமம் 6:4

இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து,

நான் இன்று உனக்கு கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். – உபாகமம் 10 : 12, 13

---

## 1. மாபெரும் அறிக்கை :

★ மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

★ பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார். மத். 16 : 16 – 19

## 2. பிரதான கற்பனை :

★ இயேசு அவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை.

★ இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. – மத்தேயு 22 : 37–39

**3. மாபெரும் கட்டளை :**

★ அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

★ ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

★ நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். – மத்தேயு 28 : 18–20

**4. மகா மேன்மையான வாக்குத்தத்தம் :**

★ நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

★ உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். – ஆதி. 12 : 2, 3

**5. மாபெரும் அழைப்பு :**

★ நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

– யோவான் 15 : 16

★ அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன். அப் 9:15,16

**6. நமது சபையின் தரிசன வாக்கியம் :**

★ இந்த உலகில் தேவனுடைய ராஜ்யம் வரும்படியாக, நம்மைக் குறித்த தேவனுடைய சித்தம் நிறைவேற்றி, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதே நமது தரிசனம்.

★ பிரதான கற்பனையையும், மாபெரும் கட்டளையையும் நிறைவேற்ற நமது சபை பூரணமாய் அர்ப்பணித்து இருக்கிறது.

## நமது ஸ்தாபனத்தின் விசுவாச சத்தியங்கள் - 16

1. பரிசுத்த வேதாகமம் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.
2. ஒரே மெய்யான தேவன் – திரித்துவம்
3. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம்
4. மனிதனின் வீழ்ச்சியும், மீட்பும்.
5. இயேசு கிறிஸ்து அருளும் மனிதனின் இரட்சிப்பு.
6. தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானமும், கர்த்தருடைய பந்தியும்
7. பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.
8. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை உடனடி அடையாளம்.
9. பரிசுத்தமாக்குதல் : பரிசுத்த வாழ்வு.
10. சபை : இரட்சிக்கப்பட்டவர்களின் ஐக்கியம், ஞாயிறு ஆராதனை.
11. சபையின் பிரதான ஊழியம் : உலக சுவிசேஷ பிரபல்யம், பக்தி விருத்தி அடைதல்.
12. தெய்வீக சுகம்.
13. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.
14. கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சி.
15. இறுதி நியாயத் தீர்ப்பு
16. புதிய வானமும், புதிய பூமியும்.

---

## விசுவாசப் பிரமாணம்

★ வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

★ அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்.

★ அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்து பிறந்தார்.

★ பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்.

★ மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்திற்கு ஏறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

★ அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்க வருவார்.

★ பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்.

★ பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கின்றேன். ஆமென்.

# இரட்சிப்பு

கிறிஸ்துவ வாழ்க்கை என்பது ஏதோ, ஒரு சில சட்ட திட்டங்களை கடைபிடிப்பதோ, அல்லது சில சடங்குகள், சம்பிரதாயங்களை கைக்கொள்வதோ அல்ல. அது கிறிஸ்து இயேசுவோடுள்ள உறவினால் பெற்றுக்கொள்ளக்கூடிய புது வாழ்வு. பாவத்திலிருந்து மன்னிப்பு பெற்றுக் கொள்வது, வியாதியிலிருந்து சுகம் பெறுவது, தீய சக்தியிலிருந்து விடுதலை பெறுவது, ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படுவது, தரித்திரத்திலிருந்து செழிப்பை பெறுவது, இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவது, மரணத்திலிருந்து நித்திய ஜீவனை பெறுவது, அஞ்ஞானத்திலிருந்து சத்தியத்தை அறிவது, சாபத்திலிருந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வது என்பதே இரட்சிப்பு. இந்த புதுவாழ்வை நமக்கு அருள இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தார். அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார். இப்போது நாம் வேண்டிக்கொண்டால் நமது விண்ணப்பத்தை கேட்டு ஆசீர்வதிப்பார். இந்த ஆசீர்வாதமான புதுவாழ்வாகிய இரட்சிப்பை நமது விசுவாசத்தினாலும், தேவனுடைய கிருபையினாலும் பரிசாக பெற்றுக் கொள்கிறோம். (யோவான் 10:10) இதை புரிந்துகொள்ள கீழ்வரும் ஐந்து பாலங்களை காண்போம்.

## பாலம் 1




தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவையும் படைத்தார். மனிதனும் தேவனும் ஐக்கியமாக இருக்கவும், மனிதன் தேவனை மகிமைப்படுத்தவும் தேவன் தம்முடைய சாயலாக மனிதனை உருவாக்கி படைத்தார். தேவனின் அன்பு, சந்தோஷம், சமாதானம் என்று அனைத்தையும் பூரணமாக அனுபவித்து வந்தான். மனிதன் தேவனின் சித்தம் செய்வதில் மகிழ்ச்சியாயிருந்தான். (ஆதி 1:26-29)
இது ஐக்கியத்தின் பாலம்.

---

## பாலம் 2




மகிழ்ச்சியாயிருந்த முதல் குடும்பமாகிய ஆதாம், ஏவாள் என்பவர்களை சாத்தான் தேவனுடைய வார்த்தைக்கும், கட்டளைக்கும் கீழ்ப்படியாமல் அவர்களை சுயமாக செயல்பட வஞ்சகமாக தூண்டினான். இதனால் மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவில் பிளவு ஏற்பட்டு விட்டது. தேவனுக்கு கீழ்ப்படியாமல் தன்னிச்சையாக சாத்தானின் வார்த்தையின் படி செயல்பட்டான். இதுவே பாவம் பாவத்தின் சம்பளம் மரணம். நிரந்தர பிரிவு. தேவனின் அன்பு, சந்தோஷம், சமாதானம் இவைகளை இழந்தான். ரோமர் 3:23,6:23. – இது பிளவுப்பட்ட பாலம்

## பாலம் 3




மனிதன் தான் இழந்து போன தேவனுடைய அன்பையும், பாவ மன்னிப்பையும், தேவ சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற பலவிதங்களில் முயற்சி செய்கிறான். ஆனால் தன்னுடைய சுய முயற்சியினாலும், தானதர்மங்களினாலும், நற்கிரியைகளாலும் இழந்து போன உறவை புதுப்பிக்க முடியவில்லை. தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள முடியவில்லை. (ஆதி 3:7.) - இது இணைக்கப்பட முடியா பாலம்.

---

## பாலம் 4




மனிதனை தேவனோடு ஐக்கியப்படுத்த இயேசு இந்த உலகத்திற்கு மனிதனாக வந்தார். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக கிருபாதார பலியாக இரத்தம் சிந்தி மரித்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்கும். இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். இன்று அவரை நோக்கி கூப்பிடும் யாவருக்கும் தேவனோடு அவர்களை இணைக்கும் பாலமாக இருக்கிறார். (யோவான் 3:16, 1யோவான் 1:7,9) இது சிலுவையினால் இணைக்கப்பட்ட பாலம்

---

## பாலம் 5




இன்று, இப்போது இயேசுவை உங்கள் ஆண்டவராக, இரட்சகராக, இராஜாவாக நம்பி, ஏற்றுக் கொள்ளுங்கள். அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியுங்கள், அவருடைய வழிகாட்டுதலுக்கு அர்ப்பணியுங்கள். அப்பொழுது, நீங்கள் இயேசு அருளும் தேவனுடைய அன்பு, பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பின் சந்தோஷம், தெய்வீக சமாதானம் இவைகளை பெற்றுக் கொள்ளுவீர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். புது வாழ்வை பெறுவீர்கள். (அப் 16:31.)

இது புது வாழ்க்கையின் பாலம்.

**கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவனும் மனிதனும் இணைக்கப்படுகிறார்கள். விசுவாசத்தினால் புதிய வாழ்வு மலர்ந்து விட்டது.**

# நற்செய்தி சுருக்கம்

1. தேவன் மனிதனை தமது சாயலாக மண்ணினாலே படைத்தார். அவனை ஆதாம் ஏவாளாக உருவாக்கினார்.
2. தேவன் மனிதனை நேசித்தார். தமது திட்டங்களையும் கட்டளைகளையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.
3. மனிதனோ தேவனை சார்ந்து வாழாமல் சாத்தானின் வஞ்சனையினால் சுயமாக வாழ தீர்மானித்தான்.
4. இதனால் மனுவர்க்கம் தேவன் அருளும் ஆசீர்வாதத்தையும் தேவனோடுள்ள உறவையும் இழந்தது.
5. மனிதன் தேவனின் பூரண ஆசீர்வாதத்தையும், திட்டத்தையும் அறியவும், அனுபவிக்கவும், அவரோடு இணையவும் பல வழிமுறைகளில் முயற்சிக்கிறான். ஆனால் அவனால் முடியவில்லை. மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது.
6. மனிதன் தேவன் வைத்திருக்கிற பூரண ஆசீர்வாதத்தையும், திட்டத்தையும் அறிந்து அனுபவிக்கவும், தேவனோடு ஒப்புரவாகி இணையவும், இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மனிதனாக வந்தார்.
7. இயேசு கிறிஸ்துவே ஆண்டவர், இரட்சகர், மீட்பர்.
8. இயேசு பாவமற்ற பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார்.
9. இயேசு கிறிஸ்து வியாதி உள்ளவர்களை சுகமாக்கினார், பிசாசின் பிடியிலிருந்தவர்களை விடுவித்தார், தேவனுடைய நீதியை பிரசங்கித்தார், பாவிகளை மன்னித்தார், சீஷர்களை உருவாக்கினார், தம்மை உலகின் இரட்சகராக வெளிப்படுத்தினார்.
10. நம்முடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையிலே தண்டிக்கப்பட்டார். நம் பாவங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார். நமக்காக யாவையும் செய்து முடித்தார்,
11. இயேசு மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார். ஆயினும் மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார். இப்போது பரலோகத்தில் இருக்கிறார். இலவச ஈவாகிய நித்திய ஜீவனான இரட்சிப்பை கொடுக்கிறார்.
12. இந்த ஈவு விசுவாசத்தால் பெற்றுக்கொள்ளப்படுகிறது. விசுவாசம் என்பது வெறும் மூளை அறிவோ மற்றும் மத சடங்குகளை கைக்கொள்வதோ அல்ல. உங்கள் முழு இருதயத்தோடும் இயேசு கிறிஸ்துவை மட்டும் நம்பி அவருக்கு பின்செல்வேன் என்பதே.

இதுவே நாம் செய்ய வேண்டிய தீர்மானம்.

இப்போதே தேவனோடு பேசுங்கள். அதுதான் ஜெபம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

# மாதிரி ஜெபம்

அன்புள்ள இயேசு கிறிஸ்துவே! நீர் எனக்கு தேவை. என் பாவங்களை மன்னியும், உம் இரத்தத்தால் என்னை சுத்தமாக்கும். என் இருதயத்திற்குள் வாரும். இயேசுவே. உம்மை என் இரட்சகராகவும், இராஜாவாகவும், தேவனாகவும் ஏற்றுக்கொள்கிறேன். இன்று முதல் உம்மையே ஆராதிப்பேன். என் உயிருள்ள நாளெல்லாம் உம்மை பின்பற்றுவேன். நான் எப்படிப்பட்ட நபராக மாற நீங்க விரும்புகிறீரோ அப்படிப்பட்ட நபராக என்னை மாற்றும். நன்றி ஆமென்.

இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். –வெளி 3:20. ஆகவே, நீங்கள் மேலே சொன்னபடி ஜெபித்தால், இயேசு தம்முடைய வார்த்தையின்படியே உங்களை ஏற்றுக்கொள்வார்.

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் .............................. கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை (இயேசுவை) தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் .............. அன்புகூர்ந்தார்–யோவான் 3:16.

(கோடிட்ட இடத்தில் உங்கள் பெயரை எழுதிக்கொள்ளுங்கள். )

---

# நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளும்போது இயேசு சொல்கிறார்


நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னை கைவிடுவதுமில்லை. – யோசுவா 1:5.

நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்து கொண்டேன்.... நீங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.–யோவான் 15:16

**இனிமேல் நீங்கள் செய்ய வேண்டியது :**

1. தினமும் தேவனோடு நேரம் செலவிடுங்கள். அதாவது ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்துவின் அன்புக்காக நன்றி சொல்லுங்கள், தேவனிடத்தில் அன்பு கூருங்கள். (ஆராதியுங்கள்)
2. வேதவசனத்தை முறையாக வாசித்து தியானியுங்கள்.
3. பரிசுத்தவான்களோடு ஐக்கியப்படுங்கள். திருச்சபை ஐக்கிய நேரங்களில் கலந்து தேவனை ஆராதியுங்கள். திருச்சபை வளர்ச்சிக்காக ஜெபியுங்கள். கொடுங்கள், சேவை செய்யுங்கள்.
4. உங்கள் அனுபவத்தை யாவருக்கும் சாட்சியாக அறியுங்கள்.
5. தேவனுக்கு பிரியமாக சமுதாயத்திலும், குடும்பத்திலும், வேலை பார்க்கும் இடத்திலும் பரிசுத்தமாக வாழ்ந்து தேவன் உங்களுக்கு தந்த வரங்கள், தாலந்துகள், திறமைகளை தேவ ராஜ்ய மேன்மைக்காக பயன்படுத்துங்கள். இயேசுவின் அன்பை பிரதிபலியுங்கள்.

**தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக**
**தேவனுடைய இராஜ்ஜியம் வருதாக**
**தேவனுடைய சித்தம் நிறைவேறுவதாக**




**அப். 2 : 38-47**

**1. திருச்சபை அங்கத்தினர் தகுதிகள்**

**2. திருச்சபைக்குள் நடக்கும் நிகழ்ச்சிகள்**

**3. திருச்சபை மூலம் நடைபெறும் ஊழியங்கள்.**

# ஞானஸ்நானம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக, இரட்சகராக, இராஜாவாக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுங்கள். பாவங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையின்படி உங்கள் வாழ்க்கையை வாழ தீர்மானியுங்கள். ஜெபியுங்கள், அர்ப்பணியுங்கள். உங்கள் இருதயத்தில் நிகழ்ந்த இந்த மாற்றமே இரட்சிப்பின் அனுபவம். இதையடுத்து இந்த உள்ளான மாற்றத்திற்கு வெளிப்படையான சாட்சியின் அடையாளமாக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளுங்கள்.

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்.

– மாற்கு **16:16**

இது ஒரு உடன்படிக்கை, சத்திய வாக்கு, அத்தாட்சி, கிறிஸ்தவ புது வாழ்வின் துவக்கத்தின் அடையாளம்: – **1** பேதுரு **3:21**

உயர்வோ–தாழ்வோ, இன்பமோ–துன்பமோ, வெற்றியோ–தோல்வியோ, வாழ்வோ–சாவோ என்ன வந்தாலும் நான் இயேசுவை விட்டு விலகமாட்டேன். என் வாழ்நாள் முழுவதும் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவேன், அவர் நாமத்தை பரிசுத்தம் பண்ணுவேன், தேவ ராஜ்ய மேன்மைக்காக வாழ்வேன், அவர் சித்தம் நிறைவேற்றுவேன் என தேவனோடு செய்கிற பொருத்தனையின் சத்திய வாக்கே ஞானஸ்நானம்.

ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளோடு நம்மை இணைக்கிறது. நாம் பாவத்திற்கு செத்து, தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு, நீதிக்கு பிழைத்திருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சியாக இருக்கிறது. – ரோமர் **6:3–6**

ஞானஸ்நானம் இயேசுவின் கட்டளை. – மத்தேயு **28:18–20**

நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது, பிசாசின் ராஜ்யத்திலிருந்து பிரிந்து, தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாகிறோம். பாவம், சாபம், பிசாசு இவைகளுக்கு நம்மேல் அதிகாரமில்லை. இனி பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின. – **1**கொரி **5:17.**

இனி கிறிஸ்துபோல வாழவும் சேவை செய்யவும், பெலப்படுத்தப் படுகிறோம். நம்மை காண்பவர்கள் இயேசு கிறிஸ்துவை நம்மில் காண்பார்கள். – கொலோ. **3:26.27**

# பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

இயேசுவை போன்ற குணாதிசயங்களோடு வாழவும், அவரைப்போல சேவை செய்யவும் நம்முடைய சுய பெலத்தால் முடியாது. மனிதன் இயல்பாகவே சுயநலக்காரன். சுயத்தை மையமாக கொண்ட வாழ்வு பாவம். ஆக சுயத்தை ஜெயித்து ஜெயமாக வாழ நமக்கு தைரியமும் பெலமும் தேவை. நாம் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளும்போது, அவருக்கென்று வாழ தைரியப்படுத்துகிறார். பெலப்படுத்துகிறார்.

அப்.1:8–ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

2 தீமோ. 1:7–ல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

**பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்வது எப்படி?**

❖ இயேசு என் பாவங்களை எல்லாம் மன்னித்து விட்டார். நான் இரட்சிக்கப்பட்டேன் என்ற நிச்சயம் வேண்டும்.

❖ தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

❖ தேவனுடைய அபிஷேகத்திற்காக தாகத்தோடு, வாஞ்சையோடு, ஜெபித்து காத்திருக்க வேண்டும்.

❖ விசுவாசத்தோடு ஜெபித்து அபிஷேகத்திற்கு அடையாளமான அந்நியபாஷையை பெற்றுக் கொள்ளுங்கள். – அப். 2:1–4.

❖ ஆவியின் கனிகளையும், வரங்களையும் பெற்று மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்ளுங்கள். தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். தேவ ராஜ்ய விரிவாக்கத்திற்காக சேவை செய்யுங்கள். உங்களை குறித்த தேவசித்தம் நிறைவேற ஆவியானவரால் நிரப்பப்படுங்கள்.

❖ பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுங்கள், பரிசுத்த ஆவியானவருக் கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள். – கலா. 5:16–25.

❖ அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். –எபே. 4:30

# சீஷத்துவம்

சீஷத்துவம் என்றால் இயேசுவினிடத்தில் அன்பு கூருபவன். இயேசுவை உலகிற்கு தன் வார்த்தையாலும், வாழ்க்கையாலும் காட்டுபவன். அனைத்து மக்களிடமும் அன்பு காட்டுபவன். – மத். 5,6,7.

கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்காக ஊக்கமாக ஜெபிப்பவன், தியாகமாக கொடுப்பவன், கடினமாக உழைப்பவன். உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு. – நீதி. 3:9.

இயேசு கிறிஸ்துவின் அன்பை அவரை அறியாதவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பவன். கிறிஸ்துவின் அன்பு, போதனை, வாழ்க்கை இவைகளை வார்த்தையாலும், வாழ்க்கையாலும், கிரியைகளினாலும் வெளிப்படுத்துகிறவனே சீஷன்.

எல்லாரை காட்டிலும், எல்லாவற்றை காட்டிலும் இயேசு கிறிஸ்துவின் மேல் அழியாத அன்பு கூருகிறவனே சீஷன். –எபேசியர் 6:24. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவேனே சீஷன். – மத்தேயு 6:33. என்ன வந்தாலும், எது நடந்தாலும் கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிக்க முடியாதவன்.

சீஷன் கற்றுக்கொள்பவன். மற்றவர்களுக்கு கற்றுக்கொடுப்பவன். பெற்றுக்கொள்பவன். மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பவன். இயேசுவை பின்பற்றுகிறவன் மற்றவர்களை கிறிஸ்துவை பின்பற்ற நடத்துகிறவன்.

பரிசுத்த ஆவியினால் நிறைந்து, பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிறவன். அப்படியே பரிசுத்த ஆவிக்கேற்றபடி நடந்து கொள்கிறவன். – கலாத்தியர் 5: 16,18,25. ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறவன். – கலாத்தியர் 5:22,23. ஆவியின் வரங்களை பயன்படுத்துகிறவன். – 1 கொரிந்தியர் 12:7–10. மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளவன்.

சத்தியம், நீதி, நற்செய்தி அறிவித்தல், விசுவாசம், இரட்சிப்பின் நிச்சயம், வேத வசனம், ஜெபம் என்ற ஏழு தேவனின் சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொண்டவன்– எபேசியர் 6:10–18. கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் பாடு சகிப்பவன். – அப். 9:15,16

இயேசு கிறிஸ்து எதற்காக பிடித்துக்கொண்டாரோ அதை பிடித்துக்கொள்ளும்படிக்கும், தேவன் அழைத்த அழைப்பின் பரம இலக்கு நிறைவேறும்படி ஆசையாய் தொடர்கிறவன். இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்கிறவன் தான் சீஷன் – பிலிப்பியர் 3:10–21.

# உக்கிராணத்துவம்

நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும், அர்த்தமும், திட்டமும் இருக்கிறது. நாம் இயேசுவுக்கு நம் வாழ்வை ஒப்புக்கொடுக்கும்போது, நாம் தேவனுடைய பிள்ளையாகிறோம், அவருடைய சீஷராகிறோம், நம்மை அவர் எதற்காக படைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற பலப்படுத்தப் படுகிறோம் – எபேசியர் 2 : 10

நமக்குரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான வரங்கள், தாலந்துகள், திறமைகள், பொருளாதாரம், மக்கள், வாய்ப்புகள் இவைகளை தேவன் நமக்கு தந்திருக்கிறார் – மத்தேயு 25:14–30

நாம் நமது குடும்ப கடமைகள், சமுதாய கடமைகள், திருச்சபை கடமைகள், தேசிய கடமைகள் – இவைகளை சரிவர நிறைவேற்ற கடனாளிகளாக இருக்கிறோம்.

தேவன் நமக்கு அருளியிருக்கிற ஆவிக்குரிய வரங்கள், இதய வாஞ்சைகள், திறமைகள், குணாதிசயங்கள், அனுபவங்கள் இவைகளை முழு பெலத்தோடு பயன்படுத்தி இயேசுவை பிரதிபலிக்க பிரயாசப் படுவோமாக.

தேவனுடைய நாமத்தை பரிசுத்தப்படுத்துவோமாக. தேவனுடைய ராஜ்யத்தை கட்ட நமக்கு தேவன் அருளியிருக்கிற அனைத்து அம்சங்களையும் பயன்படுத்துவோமாக. தேவ சித்தம் நிறைவேற்ற பிரயாசப்படுவோமாக – மத்தேயு 6 : 9, 10

வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லாவற்றிற்கும் தேவனே சொந்தக்காரர். நாம் தேவனுடையவர்கள். நாம் தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டியவர்கள். தேவன் நமக்கு பலன் தருவார்.

நாம் திருச்சபையில் பங்குபெறுபவர்கள் மட்டுமல்ல. நம்முடைய ஜெபம், கடின உழைப்பு, தியாக காணிக்கை இவைகளால் திருச்சபை வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களாகவும் இருக்கவேண்டும். நாம் ஆசீர்வதிக்கப்பட்ட அங்கத்தினர்கள் மட்டுமல்ல மற்றவர்களை வழிநடத்தும் சீஷர்களாகவும் திகழவேண்டும் – எபேசியர் 4:11–16

**நமது தரிசனம் :**

இந்த பூமியிலே தேவனுடைய ராஜ்யம் வரும்படியாக, நம்மை குறித்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதே நமது தரிசனம்.

**நாமக்கல் மறுரூபமாவதற்காக :**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவும்,
அவர்களுக்கு பின்தொடர் பணி செய்து பராமரிக்கவும், பயிற்சிகொடுத்து
சீஷராக்கவும், அனுதினமும் ஜெபிக்கவும், சமூக சேவை செய்யவும்,
நிர்வகிக்கவும் நாமக்கல் ஏ.ஜி. சபை செயல்படுகிறது.

**இதில் உங்கள் பங்கு என்ன ???**

## உங்கள் குறிப்புகள்

# சபையின் ஜெப நேரங்கள்

**தினமும் :**

| | | | |
|---|---|---|---|
| காலை | 5 : 30 | முதல் | 6 : 30 |
| முற்பகல் | 10 : 00 | முதல் | 1 : 00 |
| மாலை | 7 : 00 | முதல் | 8 : 00 |

**ஞாயிறு ஆராதனைகள் :**

| | | | |
|---|---|---|---|
| காலை | 6 : 00 | முதல் | 8 : 30 |
| காலை | 9 : 00 | முதல் | 11 : 30 |
| மாலை | 7 : 00 | முதல் | 8 : 30 |

# இயேசுவில் சீஷனின் வாழ்வு




ஒரு சீஷன் உலகிற்கு
உப்பாக, வெளிச்சமாக
அடைக்கலப்பட்டணமாக
இருக்கிறான்.

அன்பின் கனிகளையும்
வல்லமை வரங்களையும்
தேவனுடைய வார்த்தையையும்
உலகிற்கு வெளிப்படுத்துகிறான்.

சிலுவையில் செங்குத்து கோடு தேவனுக்கும் நமக்கும் உள்ள ஜெபம், ஆராதனை மற்றும் வேதத்தோடு உள்ள உறவை குறிக்கிறது.

சிலுவையில் குறுக்கு கோடு நமக்கும் உலகம், திருச்சபை மற்றும் குடும்பத்தோடு உள்ள உறவை குறிக்கிறது.

# தேவன் அருளிய கட்டளைகள் – 10

01. உன்னை அடிமைத்தனத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
02. மேலே வானத்திலிலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.
03. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
04. ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளை யெல்லாம் நடப்பிப்பாயாக.
05. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.
06. கொலை செய்யாதிருப்பாயாக.
07. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.
08. களவு செய்யாதிருப்பாயாக.
09. பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லா திருப்பாயாக.
10. பிறனுள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

---


## நாமக்கல் அசெம்பிளி ஆஃப் காட் சர்ச்,

698-A, அன்பு நகர் அருகில், சேலம் ரோடு, நாமக்கல்.

போன் : 04286 276817.

E-mail : namakkalag@gmail.com / www.namakkalag.in